# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு

2024–2025

மானியக் கோரிக்கை எண்.52

**மு.க.ஸ்டாலின்**

முதலமைச்சர்

©

தமிழ்நாடு அரசு

2024

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1–2 |
| 2. | மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016 | 3–4 |
| 2.1 | மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–னை செயல்படுத்துதல் | 5–7 |
| 2.2 | நிர்வாக அமைப்பு | 7–8 |
| 3. | புற உலக சிந்தனை, மூளை முடக்குவாதம், அறிவுசார் மற்றும் பல்வகை மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கான தேசிய அறக்கட்டளைச் சட்டம், 1999 | 8–9 |
| 4. | நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் (SDGs) | 9–11 |
| 5. | மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ சான்றிதழின் அடிப்படையில் தேசிய அடையாள அட்டை (NIDC) வழங்குதல் | 12 |
| 6. | தன்னார்வத்தொண்டு நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் அங்கீகாரம் அளித்தல் | 13–14 |
| 7. | மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் | 14–19 |
| 8. | நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் | 19–20 |
| 9. | அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள் | 20–21 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 9.1 | தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பகல் நேர பராமரிப்பு மையங்கள் | 22–23 |
| 10. | ஆதரவற்ற மனநலம் சார் மாற்றுத்திறனாளிகளுக்கான மீட்புத் திட்டம் | 23–24 |
| 11. | மறுவாழ்வு இல்லங்கள் | 25 |
| 11.1. | பதினான்கு வயதிற்கு மேற்பட்ட அறிவுசார் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள் | 25–26 |
| 11.2. | மனநலம்சார் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள் | 26–27 |
| 11.2(அ) | மனநலம் மற்றும் அறிவுசார் மாற்றுத்திறனாளிகளுக்கான 3 புதிய மறுவாழ்வு இல்லங்கள் | 27–28 |
| 11.3 | இடைநிலை பராமரிப்பு மையங்கள் | 28–29 |
| 11.4. | "மீண்டும் இல்லம்" திட்டம் | 29–30 |
| 11.5. | தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு மறுவாழ்வு இல்லங்கள் | 30–33 |
| 11.6. | முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள் | 33–34 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 12. | மாநில வள மற்றும் பயிற்சி மையங்கள் – சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி | 34–36 |
| 13. | சிறப்புக்கல்வி | 36 |
| 13.1 | சிறப்புப்பள்ளிகள் | 37–38 |
| 13.2 | சிறப்புக்கல்வி மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் | 38 |
| 13.2.1. | திறன் வகுப்பறைகள் | 38–39 |
| 13.2.2. | பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன வாசிக்கும் கருவி | 39 |
| 13.2.3. | தரம் உயர்த்தப்பட்ட சிறப்புப்பள்ளிகள் | 40 |
| 13.2.4. | சிறப்புப்பள்ளி மதிப்பூதியத்தினை வழங்குதல் | 40–42 |
| 13.2.5. | உணவூட்டு மானியத்தை வழங்குதல் | 42–43 |
| 13.3. | கல்வி உதவித்தொகை | 43–44 |
| 13.4. | வாசிப்பாளர் உதவித்தொகை | 45–46 |
| 13.5. | தேர்வெழுத உதவுவோருக்கான உதவித்தொகை | 46–47 |
| 13.6. | இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு வழங்கப்படும் ஊக்கத்தொகை | 47–48 |
| 13.7. | சட்டம் பயின்ற மாற்றுத்திறன் பட்டதாரிகளுக்கான உதவித் தொகை | 49 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 13.8. | செவி மாற்றுத்திறன் மாணவர்களுக்கான பி.காம்., பி.சி.ஏ., பட்டப்படிப்பு | 50–51 |
| 14 | உதவி உபகரணங்கள் | 51 |
| 14.1. | பல்வேறு வகையான உதவி உபகரணங்கள் | 51–56 |
| 14.2. | மாற்றுத்திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களை தாங்களே தேர்ந்தெடுக்கும் முறை | 56–57 |
| 15. | சமூக பாதுகாப்புத் திட்டங்கள் | 58 |
| 15.1. | பராமரிப்பு உதவித்தொகை | 58–60 |
| 15.2. | அதிக உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை | 60–61 |
| 15.3. | படித்த வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நிவாரணத்தொகை | 61–62 |
| 15.4. | மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடு பெறுவதற்கான வட்டியில்லா கடனுதவித் திட்டம் | 63 |
| 15.5. | திருமண உதவித்தொகை | 64–65 |
| 15.6. | கட்டணமில்லா மற்றும் சலுகை கட்டணத்துடன் பேருந்து பயணத்திட்டம் | 66 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 15.6.1. | நூறு சதவிகித கட்டணமில்லா பயணம் (பேருந்து பயணச் சலுகை அட்டை) | 66–67 |
| 15.6.2. | பேருந்து கட்டணங்களில் 75 சதவிகித பயணச்சலுகை | 67–68 |
| 16. | மாற்றுத்திறனாளிகளுக்கு சமூகப் பொருளாதார அதிகாரமளிக்கும் திட்டங்கள் | 68–70 |
| 16.1. | ஒன்றியப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) அகில இந்திய குடிமைப்பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) தொகுதி–I முதன்மைத் தேர்வெழுத ஊக்கத் தொகை | 70–71 |
| 16.2. | சமவாய்ப்புக் கொள்கை | 71 |
| 16.3. | மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிதி மேம்பாட்டுக் கழகம் (NDFDC) | 72 |
| 16.4. | குறுந்தொழில் துவங்க நிதியுதவி | 73–74 |
| 16.5 | பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) | 74–75 |
| 16.6 | வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) | 76–77 |
| 16.7 | ஆவின் விற்பனை மையம் அமைப்பதற்கான நிதியுதவி | 77–78 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 16.8 | புத்தகக் கட்டுநர் பயிற்சி | 79 |
| 16.9 | பல்லூடகப் பயிற்சி மற்றும் டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி | 80 |
| 16.10 | பொருத்துநர் பயிற்சி | 81 |
| 16.11 | வணிக வளாகங்களில் உள்ள கடைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 5 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம் | 82 |
| 17. | மாநில விருதுகள் | 82–86 |
| 18. | தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் | 87–91 |
| 19. | முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டம் | 91–92 |
| 20 | உரிமைகள் திட்டம் ('RIGHTS' Project) | 92–96 |
| 21. | சிறப்பு முன்னெடுப்புகள் | 96–97 |
| 22. | ஒன்றிய அரசின் திட்டங்கள் | 97 |
| 22.1 | தனித்துவம் வாய்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை (UDID) | 97–98 |
| 22.2 | மாற்றுத்திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பொருத்துவதற்கான உதவித்திட்டம் (ADIP Scheme) | 98–99 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 22.3 | தீனதயாள் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் (DDRS) | 99–100 |
| 22.4 | தடையற்றச் சூழலை ஏற்படுத்தும் பிரச்சாரம் (சுகம்யா பாரத் அபியான்) | 100–102 |
| 22.5 | மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை | 102–103 |
| 23. | முடிவுரை | 104 |

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 1. | மாற்றுத்திறன் வகைகள் | 4 |
| 2. | ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் | 16 |
| 3. | ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் | 18 |
| 4. | தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு மறுவாழ்வு இல்லங்கள் | 32 |
| 5. | கல்வி உதவித்தொகை | 44 |
| 6. | வாசிப்பாளர் உதவித்தொகை | 45 |
| 7. | உயர்கல்வியை ஊக்குவிப்பதற்கான ஊக்கத்தொகை | 48 |
| 8. | உதவி உபகரணங்கள் | 52 |
| 9. | பராமரிப்பு உதவித்தொகை | 59 |
| 10. | படித்த வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நிவாரணத்தொகை | 62 |
| 11. | சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் மாநில விருதுகள் | 83 |

| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் |
|---|---|---|
| 12. | உலக மாற்றுத்திறனாளிகள் தினமான டிசம்பர்–3 ஆம் நாள் வழங்கப்படும் மாநில விருதுகள் | 85 |
| 13. | மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உதவிகள் | 88 |
| 14. | தேசிய கல்வி உதவித்தொகை | 103 |
| 15. | 2024–2025–ஆம் நிதியாண்டிற்கான திட்ட வாரியான நிதி ஒதுக்கீடு | 105 |

# மாற்றுத்திறனாளிகள் நலத்துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2024–2025

## 1. முன்னுரை

தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகளின் நலன் மீது சிறப்பு கவனம் செலுத்தி மாற்றுத்திறனாளிகள் நலத் துறை எனும் தனித்துறையை உருவாக்கியுள்ளது. 1992–ஆம் ஆண்டு முதல் ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை என அழைக்கப்பட்டு வந்த இத்துறையானது, இதன் நோக்கத்தை விரிவுபடுத்தி மாற்றுத்திறனாளிகளின் ஒட்டுமொத்த நலனையும் உறுதி செய்யும் வகையில் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் மு.கருணாநிதி அவர்களால் "மாற்றுத்திறனாளிகள் நலத் துறை" என 2010–ஆம் ஆண்டு முதல் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. மாற்றுத்திறனாளிகள் நலத் துறை முதலமைச்சர் அவர்கள் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகிறது என்பது

மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக இவ்வரசு கொண்டுள்ள அசைக்க முடியாத அர்ப்பணிப்பு போக்கினை எடுத்துரைக்கிறது.

தமிழ்நாடு அரசால் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக செயல்படுத்தப்படும் பல்வேறு நலத்திட்டங்கள் ஆரம்ப நிலையிலேயே மாற்றுத்திறன்களை கண்டறிந்து பயிற்சி அளித்தல், பள்ளிக்கல்வி மற்றும் உயர்கல்வியினை உறுதி செய்தல், வாழ்வாதாரத்தினை மேம்படுத்துதல், நலவாழ்வினை உறுதி செய்தல், தடையற்ற சூழலை உருவாக்குதலை ஊக்குவித்து மேம்படுத்துதல், சமவாய்ப்பினை உறுதிசெய்தல் மற்றும் சுயமரியாதையுடன் வாழ்வதை உறுதிபடுத்துதல், அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தை ஏற்படுத்துதல் ஆகிய இலக்குகளின் மூலம் மாற்றுத்திறனாளிகள் மேம்பாடு அடையும் வகையில் இவ்வரசு செயல்பட்டுவருகிறது.

## 2. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016

மாற்றுத்திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. அச்சட்டம் 2017–ஆம் ஆண்டு ஏப்ரல் 19 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பில் மேற்கொண்ட உடன்படிக்கையினை நிறைவேற்றும் வகையில் இச்சட்டம் செயல்பாட்டில் உள்ளது. இச்சட்டத்தில், 21 மாற்றுத்திறன்கள் வகைப்படுத்தப்பட்டு, அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் சுயமரியாதையுடன் கூடிய பொருளாதார ஏற்ற நிலை அமைவதற்கும், பாரபட்சமில்லாமல் நடத்தப்படுவதற்கும், அவர்கள் சமுதாயத்தில் முழுமையாக பங்கேற்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள 21 மாற்றுத்திறன் வகைகள் பின்வருமாறு

### அட்டவணை எண் 1

| வ. எண். | மாற்றுத்திறன்களின் வகைகள் |
|---|---|
| 1. | கை கால் இயக்க குறைபாடு |
| 2. | அமில வீச்சினால் பாதிக்கப்பட்டோர் |
| 3. | மூளை முடக்கு வாத பாதிப்பு |
| 4. | தொழு நோயிலிருந்து குணமடைந்தோர் |
| 5. | தசைச் சிதைவு நோய் |
| 6. | குள்ளத்தன்மை |
| 7. | கண் பார்வையின்மை |
| 8. | குறைபார்வை |
| 9. | காது கேளாமை |
| 10. | செவித்திறன் குறைபாடு |
| 11. | பேச்சு மற்றும் மொழித்திறன் குறைபாடு |
| 12. | அறிவுசார் குறைபாடு ( மனவளர்ச்சி குன்றியவர் ) |
| 13. | புற உலக சிந்தனையற்றவர் |
| 14. | குறிப்பிட்ட கற்றலில் குறைபாடு |
| 15. | மன நோய் |
| 16. | நாள்பட்ட நரம்பியல் பாதிப்பு |
| 17. | திசு பன்முகக் கடினமாதல் |
| 18. | நடுக்கு வாதம் |
| 19. | இரத்த அழிவு சோகை |
| 20. | இரத்த உறையாமை அல்லது இரத்த ஒழுகு குறைபாடு |
| 21. | அரிவாளணு இரத்த சோகை |

## 2.1. மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–னை செயல்படுத்துதல்

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–னை செயல்படுத்துவதற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:–

அ) பிரிவு 101–இன்படி தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகளுக்கான உரிமை விதிகள், 2018 உருவாக்கப்பட்டுள்ளது.

ஆ) பிரிவு 66–இன்படி மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில ஆலோசனை வாரியம் ஏற்படுத்தப்பட்டு, கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இ) பிரிவு 72–இன்படி, மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு, இச்சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதை கண்காணித்து வருகிறது.

ஈ) பிரிவு 84–இன் படி மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்படும் வன்கொடுமைகளை விசாரிக்க மாவட்ட அளவில் மாவட்ட முதன்மை நீதிமன்றத்தை சிறப்பு நீதிமன்றமாக அரசு அறிவித்துள்ளது. பிரிவு 85–இன்படி தற்போதுள்ள மனித உரிமைகளுக்கான சிறப்பு அரசு வழக்கறிஞர்கள் அனைவரையும் இச்சட்டத்தின் கீழ் வழக்குகளை கையாள்வதற்காக நியமித்து, அரசால் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

உ) சமவாய்ப்புக்கொள்கை வெளியிடப்பட்டு மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் தடையற்றச் சூழலை ஏற்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், அதற்கான அரசாணை வெளியிடப்பட்டு சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றன.

ஊ) பிரிவு 34–ன்படி அரசு பணிகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு 4 சதவீத இடஒதுக்கீடு வழங்குவதை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது மேலும், இவ்விடஒதுக்கீட்டின் அடிப்படையில் அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் உகந்த பணியிடங்கள் கண்டறியப்பட்டு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாற்றுத்திறனாளிகளுக்கு (40 சதவிகிதம் மற்றும் அதற்கு மேல்) வேலைவாய்ப்பு வழங்குவதற்கு உகந்த பணியிடங்களைக் கண்டறிய வல்லுனர் குழு அமைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றது. அரசுத்துறைகளில் 'A' மற்றும் 'B' தொகுதிகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்தவைகளாக கண்டறியப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. 'C' மற்றும் 'D' தொகுதிகளில் அனைத்து பதவியிடங்களும் மாற்றுத்திறனாளிகளுக்கு உகந்தவைகளாக கண்டறியப்பட்டுள்ளன.

எ) மாற்றுத்திறனாளி மாணவர்கள் அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் உயர்கல்வி நிறுவனங்களில் சேர்வதற்காக ஐந்து சதவிகித இடஒதுக்கீடும், உச்ச வயது வரம்பில் 5 ஆண்டுகள் தளர்வும் அளிக்கப்பட்டு வருகின்றன.

ஏ) மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக புதிய திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகளை செயல்படுத்த ரூபாய் 10.00 கோடி மதிப்பில் மாநில நிதியம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

## 2.2. நிர்வாக அமைப்பு

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–இன் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை செயல்படுத்தவும், மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு முறைகள் / திட்டங்கள் மாநிலம் முழுவதும் சென்றடைவதை உறுதி செய்யவும் மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம் சென்னையில் செயல்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு 39 மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகங்கள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல

அலுவலர் தலைமையில் மறுவாழ்வு மற்றும் அமைச்சு பணியாளர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது. இத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் பார்வைத்திறன், செவித்திறன், கடும் இயக்கதிறன் குறைபாடுடையோருக்கான சிறப்புப்பள்ளிகள், அறிவுசார் மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு நிறுவனம் மற்றும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோருக்கான மறுவாழ்வு இல்லங்கள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன.

### 3. புற உலக சிந்தனை, மூளை முடக்குவாதம், அறிவுசார் மற்றும் பல்வகை மாற்றுத் திறனாளிகளின் நலனுக்கான தேசிய அறக்கட்டளைச் சட்டம், 1999

புற உலக சிந்தனை, மூளை முடக்குவாதம், அறிவுசார் மற்றும் பல்வகை மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக 1999–இல் சட்டம் இயற்றப்பட்டு, பிப்ரவரி, 2024 வரை, 5577 பாதுகாவலர் சான்றிதழ்கள்

மேற்படி பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. இச்சட்டத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஆட்சியர் தலைமையிலான உள்ளூர் குழுவின் மூலம் (Local Level Committee) பாதுகாவலர் சான்று வழங்கப்படுகிறது. மாவட்ட ஆட்சியர் இக்குழுவின் தலைவராகவும், மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக செயல்படும் பதிவுபெற்ற நிறுவனத்தின் பிரதிநிதி மற்றும் மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்களின் பிரதிநிதிகள் இக்குழுவின் உறுப்பினர்களாக செயல்பட்டு வருகின்றனர்.

## 4. நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் (SDGs)

நீடித்த நிலையான வளர்ச்சிக்கான இலக்குகளை அடையும் வகையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் வாயிலாக பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளை

அரசு மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, வறுமையினை ஒழிப்பதற்காகவும் மற்றும் பசியினை போக்குவதற்காகவும், சிறந்த கல்வியினை வழங்கவும், உகந்த வேலை வாய்ப்பினை வழங்கவும் உரிய திட்டங்களை வகுத்து அதனை செயல்படுத்தி வருகிறது. மேலும் மாற்றுத்திறனாளிகள் சமுதாயத்தில் முழுமையாக பங்கேற்க பல்வேறு வாய்ப்புகளை வழங்கியும், மாற்றுத்திறனாளிகள் அணுகத்தக்க சூழல்களை (accessibility) அமைத்தும் வாழ்வின் அனைத்து நிலைகளையும் அடையவும், பாரபட்சமற்ற நிலையினை பெற்றிடவும் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கு சமூக பாதுகாப்பு திட்டத்தின் மூலம் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மாற்றுத்திறனாளிகள் நலத்துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் சுமார் 58 சதவீத நிதி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த

ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 2.36 இலட்சம் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2,000/- மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை வழங்கும் வகையில் ரூ.805.18 கோடி நிதியினை ஒதுக்கியுள்ளது.

மேலும் மாற்றுத்திறனாளிகள் சமூக, பொருளாதார மேம்பாடு அடையும் வகையில் மறுவாழ்வு இல்லங்கள், பகல் நேர பராமரிப்பு மையங்கள் மூலம் மறுவாழ்வு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியவர்களுக்கும், வறுமைக்கோட்டிற்குகீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் வீட்டுமனைபட்டா மற்றும் வீடுகள் ஒதுக்கப்படுகிறது. சுயவேலைவாய்ப்பு, கடனுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டுமல்லாமல் மனவளர்ச்சி குன்றியவர்களின் பெற்றோர்களும் பயனடையும் வகையில் விரிவுபடுத்தி செயல்படுத்தி வருகிறது.

### 5. மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவ சான்றிதழின் அடிப்படையில் தேசிய அடையாள அட்டை (NIDC) வழங்குதல்

மாற்றுத்திறனாளிகள் அரசின் அனைத்து சலுகைகளையும் பெறுவதற்காக அடையாள அட்டைகள் நாற்பது விழுக்காடுக்கு மேல் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரால் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான மருத்துவச் சான்றிதழ்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மாவட்டத் தலைமை மருத்துவமனை, வட்டார மருத்துவமனை மற்றும் இதர அரசு மருத்துவமனைகளில் உள்ள உரிய மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவக் குழுவினரால் மாற்றுத்திறனின் வகைக்கு ஏற்ற வகையில் வழங்கப்பட்டு வருகிறது. மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலரால் பதிவு எண் குறிப்பிடப்பட்டு பதிவு புத்தகங்கள் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

## 6. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை பதிவு செய்தல் மற்றும் அங்கீகாரம் அளித்தல்

மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்விற்காக சேவைபுரியும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில், அங்கீகாரம் அளித்தல் நிதியுதவி கோரும் நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல் ஆகியவை அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவனங்களுக்கு பயனாளிகளை பராமரிக்க தேவையான உணவு, மருத்துவ உதவி, மறுவாழ்வு சிகிச்சை, சிறப்புக்கல்வி, அந்நிறுவனங்களில் பணிபுரியும் மறுவாழ்வு பணியாளர்களுக்கு ஊதியம் போன்றவை வழங்கவும் அரசால் நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம், 2016–இன் சட்டப்பிரிவு 50–இல் வலியுறுத்தியுள்ளவாறு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை பதிவு செய்யும் அதிகாரத்திற்குட்பட்டு,

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரால் பதிவு செய்யப்படுகிறது. இச்சட்டத்தின்கீழ், இதுநாள் வரை 660 நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் ஒழுங்குமுறைச் சட்டம், 1973 மற்றும் விதிகள் 1974–இன் கீழ் 393 சிறப்பு பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன.

## 7. மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்

மாற்றுத்திறன் ஏற்படுவதற்கான காரணத்தை கண்டறிந்து அதனை ஆரம்பநிலையிலேயே தடுப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு மேற்கொண்டு வருகின்றது. இவ்வகையில் ஆறு வயதிற்குட்பட்ட பல்வேறு வகையில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்காக ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் அரசின் நிதியுதவியுடன், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

செவித்திறன் குறைபாடு, அறிவுத்திறன் குறைபாடு, பார்வைதிறன் குறைபாடு, மூளைமுடக்குவாதம், புற உலக சிந்தனையற்ற மற்றும் பல்வகை குறைபாடுகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான மையங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மாநிலம் முழுவதும் 93 ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் 304 சிறப்பு ஆசிரியர்களுடன் 2618 குழந்தைகள் பயன்பெறும் வகையில் மாவட்ட தலைநகரங்களில் செயல்படுகின்றன.

இம்மையங்களில் குழந்தைகளின் குறைபாட்டிற்கு ஏற்ற வகையில் மறுவாழ்வு பயிற்சிகளும் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கு பராமரிப்பு பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. இம்மையங்களில் பயிலும் குழந்தைகளுக்கு பயிற்சி உபகரணங்கள் வழங்கப்படுவதுடன் மதிய உணவு மற்றும் இணை உணவு, இலவச போக்குவரத்து

வசதிகள் ஆகியவை அளிக்கப்படுகின்றன. ஆண்டிற்கு ஒருமுறை சுற்றுலா அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இக்குழந்தைகளின் உடல் மற்றும் மன வளர்ச்சிக்கு ஏற்றவாறு (ஆறு வயதிற்கு பின்) ஒருங்கிணைந்த பள்ளி கல்விக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் தொடர்பான விவரங்கள் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன:-

## அட்டவணை 2

## ஆரம்பநிலை பயிற்சி மையங்கள்

| ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் | மையத்தின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | சிறப்பு ஆசிரியர் களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு 2024-2025 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| செவி மாற்றுத் திறனாளிகளுக் கான ஆரம்ப நிலை பயிற்சி மையம் | 33 | 683 | 63 | 156.94 |

| ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் | மையத்தின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை | சிறப்பு ஆசிரியர் களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு 2024–2025 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| அறிவுசார் மாற்றுத் திறனாளிகளுக் கான ஆரம்ப நிலை பயிற்சி மையம் | 32 | 1311 | 140 | 371.52 |
| பார்வை மாற்றுத் திறனாளிகளுக் கான ஆரம்ப நிலை பயிற்சி மையம் | 6 | 113 | 12 | 32.88 |
| மூளை முடக்குவாத மாற்றுத் திறனாளிகளுக் கான ஆரம்ப நிலை பயிற்சி மையம் | 2 | 69 | 7 | 17.76 |
| புற உலக சிந்தனை மாற்றுத் திறனாளிகளுக் கான ஆரம்ப நிலை பயிற்சி மையம் | 19 | 424 | 80 | 251.94 |
| பல்வகை மாற்றுத்திறன் குழந்தைகளுக் கான ஆரம்ப நிலை பயிற்சி மையம், மண்டல வள மற்றும் பயிற்சி மையம், திருச்சிராப்பள்ளி | 1 | 18 | 2 | 4.80 |
| **மொத்தம்** | **93** | **2618** | **304** | **835.84** |

## அட்டவணை 3

## ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

| திட்டம் | பயனாளிகளின் எண்ணிக்கை | பயன்பெறும் சிறப்பு ஆசிரியர் களின் எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு 2024–2025 (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| ஆரம்ப நிலை பயிற்சி மைய குழந்தைகள் ஒரு நாள் சுற்றுலா செல்வதற்கான திட்டம் | 1492 | – | 7.46 |
| அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மைய சிறப்பாசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி | – | 140 | 4.73 |
| ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் கீழ் இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்குவதற்கான போக்குவரத்துச் செலவினம் | 2287 | – | 45.90 |

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்க்காக ரூ.893.93 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.893.93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள்**

மாவட்ட தலைநகரங்களில் செயல்பட்டு வரும் ஆரம்பநிலை பயிற்சி சேவைகளை ஊரகப்பகுதிகளுக்கும் எடுத்துச்சென்று கிராமம் தோறும் மாற்றுத்திறன் குழந்தைகள் பயன்பெறும் நோக்கத்தில், மாநிலம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் நடமாடும் சிகிச்சை பிரிவு வாகனங்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வாகனத்தில் பயிற்சி உபகரணங்கள் மற்றும் கல்வி தகவல் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றுடன் மறுவாழ்வு உதவியாளர் ஒருவருடன் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவட்ட அளவில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, பல்வேறு மறுவாழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2023–2024–ஆம் நிதியாண்டில் 3,678 முகாம்கள் நடத்தப்பட்டு 14,594 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.146.52 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.172.97 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 9. அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள்

தேனி மாவட்டத்தில் அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில், இரண்டு பகல்நேர பராமரிப்பு மையங்கள் மூலம்

மொத்தம் 60 குழந்தைகள் பதிவுசெய்யப்பட்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் இரண்டு சிறப்பாசிரியர்கள் / சிகிச்சையாளர்கள், பராமரிப்பு உதவியாளர், துப்புரவு பணியாளர் ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர். இங்கு பணிபுரியும் சிறப்பாசிரியர்களுக்கு மாதந்தோறும் ரூ.18,000/– மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.10.27 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.20.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9.1. தசைச்சிதைவு நோயினால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான பகல் நேர பராமரிப்பு மையங்கள்**

தசைச்சிதைவு நோய் சார் மாற்றுத் திறனாளிகளுக்கான பகல்நேர பராமரிப்பு மையங்கள் சென்னை, திருச்சிராப்பள்ளி, வேலூர், மதுரை, திருவண்ணாமலை, சேலம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், விழுப்புரம், திண்டுக்கல், விருதுநகர், தருமபுரி மற்றும் தஞ்சாவூர் ஆகிய 14 மாவட்டங்களில் அரசின் நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் தசைப்பயிற்சி மற்றும் அடிப்படை மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 2023−2024−ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.168.82 இலட்சம் செலவில் 472 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.196.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10. ஆதரவற்ற மனநலம் சார் மாற்றுத் திறனாளிகளுக்கான மீட்புத் திட்டம்**

2010–ஆம் ஆண்டு முதல் ஆதரவற்ற மனநலம் சார் மாற்றுத்திறனாளிகளுக்காக மீட்புத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் மனநலம் பாதிப்படைந்து, குடும்பத்திலிருந்து பிரிந்து பொதுஇடங்களில் சுற்றித்திரியும் நபர்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் மீட்டெடுக்கப்பட்டு, உரிய மருத்துவ பரிசோதனைக்குப்பின் அங்கீகரிக்கப்பட்ட மறுவாழ்வு இல்லங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். இவ்வில்லங்களில் உரிய சிகிச்சைக்குப்பின் மாற்றுத்திறனாளிகள் மீண்டும் அவர்களின் குடும்பத்தினருடன் ஒன்றிணைக்க

சமூகப் பணியாளர்கள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஆதரவற்ற மனநலம் சார் மாற்றுத்திறனாளியை மீட்கொணர நபர் ஒருவருக்கு ரூ.1,500/– வீதம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.6.67 இலட்சம் செலவில் 445 நபர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.7.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 11. மறுவாழ்வு இல்லங்கள்

### 11.1. பதினான்கு வயதிற்கு மேற்பட்ட அறிவுசார் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள்

அறிவுசார் மாற்றுத்திறன் குழந்தைகள் ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மற்றும் பகல்நேர பராமரிப்பு மையங்களில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு வாழ்க்கைக் கல்வியுடன் கூடிய மறுவாழ்வு பயிற்சிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் அளிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இக்குழந்தைகள் 14 வயதினை அடைந்தபின், அவர்களுக்கேற்ற வகையில் தொழிற்பயிற்சி மற்றும் மறுவாழ்வு பயிற்சி வழங்கி, பாதுகாப்பு அளிப்பதற்காக ஆண்கள் மற்றும் பெண்கள் பயன்பெறும் வகையில் மாநிலம் முழுவதும் 67 மறுவாழ்வு இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டு 2771 பயனாளிகளுக்கு மறுவாழ்வு உதவிகள்

வழங்கப்படுகின்றன. இங்கு உணவு, உறைவிடம், மருத்துவம் ஆகிய உதவிகளுடன் தோட்டக்கலை, மெழுகுவர்த்தி தயாரித்தல், அடுமனை பயிற்சி உள்ளிட்ட பல்வேறு தொழிற்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.1067.26 இலட்சம் செலவில் 2771 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1186.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 11.2. மனநலம் சார் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள்

அரசின் நிதி உதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் மறுவாழ்விற்காக பராமரிப்பு இல்லங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வில்லப் பயனாளிகளுக்கு உணவு,

உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ வசதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மொத்தமுள்ள 108 இல்லங்களில், 51 இல்லங்கள் அரசின் நிதியுதவினை பெற்று செயல்படுகின்றன. மீதமுள்ள 57 இல்லங்கள் சுயநிதி இல்லங்களாக செயல்பட்டு வருகின்றன.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக ரூ.841.84 இலட்சம் செலவில் 2,795 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.967.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 11.2. (அ) மனநலம் மற்றும் அறிவு சார் மாற்றுத்திறனாளிகளுக்கான 3 புதிய மறுவாழ்வு இல்லங்கள்

2023–2024–ஆம் நிதியாண்டில் மனநலம்சார் மற்றும் அறிவுசார் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில்

150 பயனாளிகள் பயன்பெறும் வகையில், நான்கு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு மூன்று இல்லங்கள் கட்டுவதற்கு ரூ.14.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்து பொதுப்பணித்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 11.3. இடைநிலை பராமரிப்பு மையங்கள்

மனநலம்சார் மாற்றுத்திறனாளிகள் பகுதியளவு அல்லது முழுவதும் குணமடைந்த நிலையில் மீட்கப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை, பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு அளிக்கப்படவேண்டும். குடும்பத்தினரால் கைவிடப்பட்டும், மனநலம் தேர்ச்சி பெற்ற நிலையில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மூலம் இடைநிலை பராமரிப்பு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு அவர்களுக்கு உணவு, உறைவிடம் மற்றும் மருத்துவச் சிகிச்சைகளும், தொழிற்பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. மனநலம்சார் மாற்றுத்திறனாளிகளை மீண்டும் சமுதாயத்துடன் ஒருங்கிணைப்பதை நோக்கமாகக்

கொண்டு இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன. மதுரை, இராமநாதபுரம், திருப்பத்தூர், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் 250 பயனாளிகள் தங்கி பயன்பெறும் வகையில் இம்மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 186 நபர்கள் ரூ.125.66 இலட்சம் செலவில் இவ்வில்லங்களில் தங்கி பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.125.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11.4. "மீண்டும் இல்லம்" திட்டம்**

மனநலம் பாதிக்கப்பட்டு குணமடைந்து வரும் நபர்களை சமுதாயத்தில் ஒருங்கிணைக்கும் பொருட்டு "மீண்டும் இல்லம்" (Home Again) எனும் புதிய திட்டம் 2023–2024–ஆம் நிதியாண்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. முதற்கட்டமாக ஐந்து

மாவட்டங்களில் ஒரு மாவட்டத்திற்கு இரண்டு இல்லங்கள் வீதம் 10 இல்லங்களில் 40 நபர்கள் பயன்பெறும் வகையில் ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திட்டத்தினை செயல்படுத்துவதற்கு மன நலச்சட்டம், 2017–இன் கீழ் பதிவு செய்த தகுதியான தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டு, செயல்படுத்துவதற்கான வழிகாட்டு முறைகள் தயார் செய்து தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 11.5. தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு மறுவாழ்வு இல்லங்கள்

மாநிலம் முழுவதும் தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் நலனுக்காக 10 மாவட்டங்களில் அரசு மறுவாழ்வு இல்லங்கள்

செயல்பட்டு வருகின்றன. தொழுநோயால் பாதிக்கப்பட்டு குடும்பத்தால் கைவிடப்பட்டவர்கள் மற்றும் இத்தகைய பாதிப்படைந்தோரின் குடும்ப உறுப்பினர்களும் இவ்வில்லங்களில் சேர்ந்து பயன்பெறலாம்.

இவ்வில்லங்களில் இலவசமாக தங்குமிடம், உணவு, இரண்டு இணை உடைகள், மருத்துவ உதவி, MCR காலணிகள், செயற்கை அவயங்கள், மூக்குகண்ணாடி, போர்வைகள் ஆகியன வழங்கப்படுகின்றன. உள்ளுறையாளர்கள் உயிர் நீத்தபின், ஈமச்சடங்கிற்காக ரூ.2,000/- அரசால் வழங்கப்படுகிறது.

2023-2024-ஆம் நிதியாண்டில் பத்து அரசு மறுவாழ்வு இல்லங்களில் தொழுநோயினால் பாதிக்கப்பட்டு குணமடைந்து, தங்கியுள்ள 592 மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் ஒரு நாளுக்குரிய உணவூட்டு மானியத்தினை

ரூ.42/–லிருந்து ரூ.100/–ஆக உயர்த்தி, ஆண்டுக்கு ரூ.124.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அட்டவணை எண் 4**

**தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்த மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு மறுவாழ்வு இல்லங்கள்**

| வ. எண் | இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | பரனூர் | செங்கல்பட்டு |
| 2. | உளுந்தூர் பேட்டை | கள்ளக்குறிச்சி |
| 3. | பர்கூர் | கிருஷ்ணகிரி |
| 4. | மச்சுவாடி | புதுக்கோட்டை |
| 5. | மனையேறிப்பட்டி | தஞ்சாவூர் |
| 6. | யா. புதுப்பட்டி | மதுரை |
| 7. | மல்லவாடி | திருவண்ணாமலை |
| 8. | செல்லியம்பட்டி | தர்மபுரி |
| 9. | தேவியாகுறிச்சி | சேலம் |
| 10. | விண்ணப்பள்ளி | ஈரோடு |

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 592 பயனாளிகள் ரூ.1863.80 இலட்சம் செலவில் இவ்வில்லங்களில் தங்கி பயன்பெற்று வருகின்றனர்.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1739.61 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11.6. முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வு இல்லங்கள்**

திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்விற்காக, ரூ.100.00 இலட்சம் செலவில் 75 நபர்கள் பயன்பெறும் வகையில் மூன்று சிறப்பு இல்லங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.71.44 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**12. மாநில வள மற்றும் பயிற்சி மையங்கள் – சென்னை மற்றும் திருச்சிராப்பள்ளி**

மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையான ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவைகள், பயிற்சிகள், தகவல்கள் மற்றும் வழிகாட்டுதல் வழங்க மாநில வள பயிற்சி மையம் 2005–ஆம் ஆண்டு சென்னையிலும், 2012–ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியிலும் தொடங்கப்பட்டன. இப்பயிற்சி மையங்களில் மாற்றுதிறனுடன் உள்ள குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் பாதுகாவலர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இம்மையங்களில் மாற்றுத்திறனாளிகள் பயன்பெற மருத்துவ சான்றிதழுடன் அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன. மேலும், தகுதியான

மாற்றுத்திறனாளிகளுக்கு தொடர் வண்டி கட்டணச் சலுகை, பேருந்து கட்டணச் சலுகை, வருமான வரிச் சலுகை, அரசு தேர்வு எழுதுவதற்காக உதவியாளர் அமைத்துக் கொள்ளுதல் மற்றும் கூடுதல் நேரம் ஒதுக்கக் கோருதல் உள்ளிட்ட சலுகைகள் பெறுவதற்காக சான்றிதழ் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இம்மையங்களில் மனநலம் பாதிப்படைந்தோருக்கான பகல் நேர பராமரிப்பு மையம், ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் மற்றும் மாற்றுத்திறன் தொடர்பான தகவல் வழங்குவதற்காக இலவச தொலைபேசி அழைப்பு எண்.1800–425–0111 உதவி மையம் போன்றவை செயல்பட்டு வருகின்றன.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில், இம்மையங்களில் நடத்த ரூ.98.15 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.98.17 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**13. சிறப்புக் கல்வி**

அனைத்து மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கும் கட்டாயக் கல்வி வழங்கும் வகையில் சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. சிறப்புக் கல்வி திட்டத்தின் கீழ், அரசு சிறப்புப்பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு விடுதி வசதியுடன் கூடிய சிறப்புக்கல்வி, உணவு, உடை, கல்வி உபகரணங்கள் விலையில்லாமல் வழங்கப்படுகின்றன. இத்துடன் கல்வி உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்காக தேர்வு எழுதுபவர்களுக்கு உதவித்தொகை, வாசிப்பாளர் உதவித்தொகை, நவீன கல்வி பயிற்சி உபகரணங்கள் போன்றவையும் வழங்கப்படுகின்றன. ஆண்டுக்கு ஒரு முறை மாணவர்கள் கல்வி சுற்றுலாவிற்கு அழைத்து செல்லப்படுகின்றனர்.

## 13.1. சிறப்புப் பள்ளிகள்

மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு சிறப்புக் கல்வி வழங்கும் வகையில் 22 அரசு சிறப்புப் பள்ளிகள், 48 அரசு உதவி பெறும் சிறப்பு பள்ளிகள், 310 அரசு மானியம் பெறும் சிறப்பு பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இச்சிறப்புப் பள்ளிகள் மாற்றுத்திறன் குழந்தைகளின் தேவைக்கேற்ற நிலையில் மாநிலம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. பார்வைத்திறன் மாற்றுத்திறனாளிகள், செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கு தலா 10 அரசு பள்ளிகளும், கடுமையாக உடல் பாதிப்பு அடைந்தோருக்கு ஒரு அரசு பள்ளியும், அறிவுசார் மாற்றுத்திறனாளிகளுக்கென ஒரு அரசு நிறுவனம் என மொத்தம் 22 சிறப்புப் பள்ளிகள் அரசால் நடத்தப்படுகின்றன. இச்சிறப்பு பள்ளிகளில் 1100 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

அரசு மானியம் பெறும் 48 பள்ளிகளில் பார்வைத்திறன் மாற்றுத்தினாளிகளுக்கு

9 பள்ளிகளும், செவித்திறன் மாற்றத்தினாளிகளுக்கு 17 பள்ளிகளும், கை கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 7 பள்ளிகளும் மற்றும் அறிவு சார் மாற்றுத்திறனாளிகளுக்கு 15 பள்ளிகளும் செயல்படுகின்றன. இப்பள்ளிகளில் 4419 மாணவர்கள் சிறப்புக்கல்வி பெறுகின்றனர்.

## 13.2. சிறப்புக் கல்வி மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள்

### 13.2.1. திறன் வகுப்பறைகள்

அரசு சிறப்புப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய திறன் வகுப்பறைகள் (Smart Class) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், செவி மாற்றுத்திறன் குழந்தைகளுக்காக தொடுதிரையுடன் கூடிய கணினியுடன் இணைந்த எழுத்துப் பலகை பொருத்தப்பட்டு எளிய முறையில் படக்காட்சியுடன் பாடங்கள் நடத்தப்படுகின்றன.

பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு மின்னணு சாதனங்கள் மூலமாக பிரெய்லி எழுத்துக்கள் கற்பிக்கப்படுகின்றன. இத்தகைய வசதிகள் பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான பத்து சிறப்புப் பள்ளிகளிலும், பள்ளி கல்வித்துறை மூலம் செயல்படும் இரண்டு பள்ளிகளிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் ரூ.100.08 இலட்சம் செலவில் 2021-2022-ஆம் நிதியாண்டில் அறிமுகம் செய்யப்பட்டது.

### 13.2.2. பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கு நவீன வாசிக்கும் கருவி

2023-2024-ஆம் நிதியாண்டில் உயர்கல்வி பயிலும் 1000 பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு தலா ரூ.13,200/- மதிப்பில் நவீன வாசிக்கும் கருவிகள் ரூ.132.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் கொள்முதல் செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

### 13.2.3. தரம் உயர்த்தப்பட்ட சிறப்புப்பள்ளிகள்

மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு அவர்களின் மாவட்டத்திலேயே உயர்கல்வி வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் பொருட்டு புதுக்கோட்டையில் செயல்படும் அரசு செவி மாற்றுத்திறன் நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகவும், ஈரோடு மற்றும் விருதுநகரில் செயல்படும் செவி மாற்றுத்திறன் அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

### 13.2.4. சிறப்புப்பள்ளி மதிப்பூதியத்தினை வழங்குதல்

அரசு சாரா தன்னார்வத் தொண்டு நிறுவனங்களில் பணிபுரியும் 1009 சிறப்பாசிரியர்களின் சேவையினை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர மதிப்பூதியம் ரூ.14,000/–லிருந்து ரூ.18,000/–ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.2179.44 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.2502.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023–2024–ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளின் சேவையில் ஈடுபட்டுள்ள அரசு நிதியுதவி பெறும் ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் மற்றும் மறுவாழ்வு இல்லங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மதிப்பூதியத்தினை உயர்த்தி வழங்குவதற்காக ரூ.5314.78 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டுள்ளது.

2023–2024–ஆம் நிதியாண்டில் அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 326 சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறன் குழந்தைகளைப்

பராமரிக்க ஏதுவாக மாதந்தோறும் ரூ.4,500/– மதிப்பூதியத்தில் பராமரிப்பு உதவியாளர்களை நியமனம் செய்வதற்கு ரூ.176.04 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

### 13.2.5. உணவூட்டு மானியத்தை வழங்குதல்

2023–2024–ஆம் நிதியாண்டில் அரசு நிதியுதவியுடன் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் ஆரம்பநிலை பயிற்சி மையங்களில் பயிலும் மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு இணை உணவு மற்றும் மதிய உணவு வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

சிறப்புக்கல்வி பெறும் 7101 மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர உணவூட்டு மானியம் ஒரு மாணவருக்கு ரூ.900–லிருந்து ரூ.1200/–ஆக உயர்த்தி 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.852.12 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1026.28 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 13.3. கல்வி உதவித்தொகை

சிறப்புக்கல்வியினை மேம்படுத்தும் நோக்கத்தில் மாற்றுத்திறனாளிகளின் பள்ளி வருகையினை ஊக்குவிக்கும் நடவடிக்கையாக, மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை அவர்கள் பயிலும் வகுப்புகளுக்கு ஏற்றவாறு ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது. 2023–24–ஆம் நிதியாண்டில் மாற்றுத்திறன் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகையினை இருமடங்காக உயர்த்தி மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.700.00 இலட்சம் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:–

## அட்டவணை எண் 5

## கல்வி உதவித்தொகை

| வ. எண். | வகுப்பு விபரம் | வருடாந்திர உதவித்தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை | 2,000/– |
| 2. | 6 முதல் 8–ஆம் வகுப்பு வரை | 6,000/– |
| 3. | 9 முதல் 12–ஆம் வகுப்பு வரை | 8,000/– |
| 4. | இளங்கலை பட்டப்படிப்பு | 12,000/– |
| 5. | தொழிற்படிப்பு மற்றும் முதுகலை | 14,000/– |

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 18,629 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.1,261.88 இலட்சம் செலவில் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1,386.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13.4. வாசிப்பாளர் உதவித்தொகை

ஒன்பதாம் வகுப்பு முதல் முதுகலை பட்டப்படிப்பு வரை கல்வி பயிலும் பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு அவர்களது பாடங்களை வாசிக்க உதவுபவர்களுக்கு ஆண்டுக்கொருமுறை வாசிப்பாளர் உதவித்தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:–

**அட்டவணை எண் 6**

**வாசிப்பாளர் உதவித்தொகை**

| வ. எண். | வகுப்பு விபரம் | வருடாந்திர உதவித் தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | 9 முதல் 12–ஆம் வகுப்பு வரை | 3,000/– |
| 2. | இளங்கலை பட்டப்படிப்பு | 5,000/– |
| 3. | தொழிற்படிப்பு மற்றும் முதுகலை | 6,000/– |

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 1,360 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.73.06 இலட்சம் செலவில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 13.5. தேர்வெழுத உதவுவோருக்கான உதவித் தொகை

ஒன்பதாம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் பயிலும் பார்வை மாற்றுத்திறன் மாணவர்களுக்கு தேர்வு எழுத வசதியாக ஒரு உதவியாளரை நியமித்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வுதவியாளருக்கு உதவித்தொகையாக தேர்வு தாள் ஒன்றிற்கு ரூ.300/– வீதம் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தில் கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.27.05 இலட்சம் செலவில் 536 மாணவ / மாணவியர்கள் பயன்பெற்றுள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.45.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13.6. இடைநிற்றலை தவிர்க்கும் பொருட்டு வழங்கப்படும் ஊக்கத்தொகை

இடைநிற்றலை தவிர்க்கும் விதமாக சிறப்புக்கல்வியினை ஊக்குவித்து மாணவர்கள் உயர்கல்வியினை தொடர்வதற்காக 10, 11 மற்றும் 12–ஆம் வகுப்பு பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு ஆண்டொன்றிற்கு ரூ.1,500/– முதல் ரூ.2,000/– வரையிலான ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இத்தொகையானது, தமிழ்நாடு மின் நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் வரவு வைக்கப்பட்டு, 12–ஆம் வகுப்பு முடித்த பிறகு வட்டியுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

## அட்டவணை எண் 7

## உயர்கல்வியை ஊக்குவிப்பதற்கான ஊக்கத்தொகை

| வ. எண் | வகுப்பு | வருடாந்திர ஊக்கத்தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | 10–ஆம் வகுப்பு | 1,500/– |
| 2. | 11–ஆம் வகுப்பு | 1,500/– |
| 3. | 12–ஆம் வகுப்பு | 2,000/– |

இத்திட்டத்திற்காக கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 1,313 மாணவ / மாணவியர்களுக்கு ரூ.21.88 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.24.05 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13.7. சட்டம் பயின்ற மாற்றுத்திறன் பட்டதாரிகளுக்கான உதவித் தொகை

மாற்றுத்திறன் மாணவர்கள் தொழில்முறை படிப்பினை பயில்வதை ஊக்குவிக்கும் விதமாக சட்டப்படிப்பு பயின்று, வழக்குரைஞர் மன்றத்தில் பதிவு செய்துள்ள மாற்றுத்திறன் மாணவ / மாணவியர்களுக்கு சட்டப் புத்தகங்கள் வாங்கவும், இதர செலவினங்களுக்காகவும் ரூ.50,000/- உதவித்தொகையானது வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2023-2024-ஆம் நிதியாண்டில் 38 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.19.00 இலட்சம் செலவில் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024-2025-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.20.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 13.8. செவி மாற்றுத்திறன் மாணவர்களுக்கான பி.காம்., பி.சி.ஏ., பட்டப்படிப்பு

செவி மாற்றுத்திறன் மாணவ/ மாணவியர்கள் வேலைவாய்ப்பினை பெறும் பொருட்டு, மேல்நிலைக் கல்வியை முடித்த பிறகு பி.காம்., மற்றும் பி.சி.ஏ கல்வி பெறுவதற்காக சென்னை மாநிலக் கல்லூரியில் இவ்வகுப்புகளுக்கான சிறப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் அதிகபட்சமாக 30 மாணவ / மாணவியர்களைக் கொண்டு பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இம்மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் மூன்று கௌரவ விரிவுரையாளர்கள் மற்றும் ஒரு கணினி ஆய்வக தொழில்நுட்பாளருக்கு மாதந்தோறும் முறையே ரூ.20,000/– மற்றும் ரூ.6,000/– தொகுப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

தென் மாவட்டங்களில் உள்ள செவி மாற்றுத்திறன் மாணவர்களின் உயர்கல்விக்காக இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் செயல்பட்டு வரும் அரசு கலைக் கல்லூரியில் 2022–ஆம் ஆண்டு பி.காம். மற்றும் பி.சி.ஏ., வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 272 மாணவர்களுக்காக ரூ.16.67 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.16.32 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 14. உதவி உபகரணங்கள்

### 14.1. பல்வேறு வகையான உதவி உபகரணங்கள்

மாற்றுத்திறனாளிகள் சுயசார்புடன் சமுதாயத்தில் செயல்படவும், பிறருடன் தொடர்பு கொள்ளவும் அவர்களின் தேவைக்கேற்ப பல்வேறு உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

# அட்டவணை எண் 8

## உதவி உபகரணங்கள்

| வ. எண் | உதவி உபகரணங்கள் | மொத்த பயனாளிகள் எண்ணிக்கை | 2023–2024 மொத்த செலவினத் தொகை (ரூ. இலட்சத்தில்) | 2024–2025 நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | துணை ஊன்றுகோல் (Auxiliary Crutches) | 1759 | 12.84 | 12.00 |
| 2. | முழங்கை ஊன்றுகோல் (Elbow Crutches) | 1250 | 7.25 | 7.50 |
| 3. | உருப்பெருக்கி (Magnifier) | 145 | 14.92 | 22.00 |
| 4. | பிரெய்ல் கைக்கடிகாரம் (Braille Watches) | 1650 | 26.99 | 27.00 |
| 5. | கருப்பு கண்ணாடிகள் (Goggles) | 2331 | 3.22 | 3.00 |
| 6. | ஒளிரும் மடக்குக்குச்சிகள் (Reflective Folding Sticks) | 1825 | 7.85 | 10.00 |
| 7. | நடைப்பயிற்சி உபகரணம் (Walking device) | 109 | 2.17 | 10.00 |
| 8. | மூளை முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டோருக்கான சிறப்பு சக்கர நாற்காலி (Wheel Chair for Cerebral Palsy affected persons) | 893 | 83.50 | 30.00 |

| வ. எண் | உதவி உபகரணங்கள் | மொத்த பயனாளிகள் எண்ணிக்கை | 2023–2024 மொத்த செலவினத் தொகை (ரூ. இலட்சத்தில்) | 2024–2025 நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 9. | நேரடியாக பிறருடன் பேசி தொடர்பு கொள்ள இயலாத நிலையில் உள்ள அறிவுசார் மாற்றுத்திறனுடைய, புற உலக சிந்தனையற்ற மற்றும் மூளை வளர்ச்சி பாதிக்கப்பட்ட குழந்தைகள் மாற்று வழியில் தொடர்பு கொள்வதற்கான மென்பொருளுடன் கூடிய உபகரணம் (AVAZ software) | 135 | 47.92 | 132.65 |
| 10. | இணைப்புச்சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் (Retrofitted Petrol Scooter) | 5324 | 5111.63 | 2285.00 |
| 11. | தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் (Specially designed Retrofitted Petrol Scooter for spinal cord affected persons) | 365 | 414.15 | |
| 12. | பார்வை மற்றும் செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கான திறன்பேசிகள் (Smart phone for Hearing and Visually impaired persons) | 4793 | 639.82 | 1375.00 |
| 13. | பார்வை மாற்றுத்திறன் மாணவர்கள் பாடங்களை பதிவு செய்து படிப்பதற்கான உபகரணம் (Angel pro daisy player) | 115 | 12.44 | 11.20 |

| வ. எண் | உதவி உபகரணங்கள் | மொத்த பயனாளிகள் எண்ணிக்கை | 2023–2024 மொத்த செலவினத் தொகை (ரூ. இலட்சத்தில்) | 2024–2025 நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 14. | மூளை முடக்கு வாத குழந்தைகளுக்கான சிறப்பு நாற்காலி (Corner Seat for children with cerebral palsy) | 279 | 17.16 | 10.00 |
| 15. | நெகிழி மூடநீக்கு சாதனம் (Plastic Caliper) | 258 | 43.33 | 6.50 |
| 16. | உலோக மூடநீக்கு சாதனம் (Metal Caliper) | 58 | 9.19 | 6.50 |
| 17. | மின்கலனால் இயங்கும் சக்கர நாற்காலி (Battery Operated Wheel Chair) | 1041 | 1100.33 | 1300.82 |
| 18. | மூன்று சக்கர வண்டி (Tricycle) | 1270 | 114.93 | 75.00 |
| 19. | மடக்கு சக்கர நாற்காலி (Foldable Wheel Chair) | 2179 | 172.14 | 65.00 |
| 20. | மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம் (Motorised Sewing Machine) | 4227 | 289.13 | 162.39 |
| 21. | காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் (Behind the Ear Hearing Aid) | 5877 | 163.38 | 121.00 |
| 22. | மின்னணுவடிவில் உள்ள புத்தகங்களை பிரெய்லி எழுத்துக்கள் வடிவில் தொடு உணர்வுடன் அறிய உதவும் வாசிக்கும் கருவி ( Electronic Braille Reader) | 43 | 21.07 | 142.03 |

| வ. எண் | உதவி உபகரணங்கள் | மொத்த பயனாளிகள் எண்ணிக்கை | 2023–2024 மொத்த செலவினத் தொகை (ரூ. இலட்சத்தில்) | 2024–2025 நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 23. | நவீன ஒளிரும் மடக்குக்குச்சி (Modular Reflective Folding Stick) | 556 | 24.86 | 75.00 |
| 24. | செயற்கை அவயம் (Artificial Limb) | 902 | 84.79 | 6.50 |
| 25. | நவீன வாசிக்கும் கருவி (Modular Reading Device) | 1000 | 132.00 | 140.00 |
| | மொத்தம் | 38,384 | 8557.01 | 6036.09 |

இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டத்தின் கீழ் 2023–2024–ஆம் நிதியாண்டில் ஒரு கால் பாதிப்படைந்த மாற்றுத்திறனாளிகளும் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 500 பயனாளிகளுக்கு ரூ.450.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தி

38,384 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு, ரூ.8557.01 இலட்சம் செலவில் உதவி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக 2024-2025-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.6036.09 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 14.2. மாற்றுத்திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களை தாங்களே தேர்ந்தெடுக்கும் முறை

மாற்றுத்திறனாளிகள் தாங்கள் விரும்பும் உபகரணங்களை தாங்களே தேர்வு செய்யும் திட்டமானது 2021-2022-ஆம் ஆண்டு முதல் துவங்கப்பட்டு, முதற்கட்டமாக மூன்று சக்கர வண்டி, சக்கர நாற்காலி, மின்கலன் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலி, காதுக்கு பின்புறம் அணியும் காதொலிக் கருவி, மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம்,

இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் ஆகியவற்றை தெரிவு செய்யும் வகையில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தில் பயனாளிகள் தெரிவு செய்யும் ஒவ்வொரு உபகரணத்திற்கான நிர்ணயிக்கப்பட்ட விலை அரசால் வழங்கப்படும் அடிப்படை அறுதியிட்ட வகைகளுக்கான (Basic Assured Model) உபகரணங்களின் விலையை விட கூடுதலாக இருக்கும் பட்சத்தில் வித்தியாச தொகையினை மாற்றுத்திறனாளிகள் நேரடியாக செலுத்தி அவ்வுபகரணங்களை பெற்று பயனடையலாம்.

இத்திட்டத்தில், கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 367 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

## 15. சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்

மாற்றுத்திறானாளிகளுக்கு சம உரிமை மற்றும் பாதுகாப்பு அளிப்பதை நோக்கமாகக் கொண்டு இவ்வரசு பல்வேறு திட்டங்களை வகுத்து அவர்கள் சமுதாயத்தில் ஒருங்கிணைந்து வாழ்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 15.1. பராமரிப்பு உதவித்தொகை

மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக மாதந்தோறும் பராமரிப்பு உதவித்தொகையாக ரூ.2,000/- அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவித்தொகையானது மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம் மூலம் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்து பயனாளிகளின் வங்கி கணக்கில் நேரடியாக உதவித்தொகை செலுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பயனடையும் மாற்றுத்திறனாளிகளின் வகைகள் பின்வருமாறு:-

## அட்டவணை எண் 9

## பராமரிப்பு உதவித்தொகை

| வ. எண் | மாற்றுத்திறன் வகை | உதவித் தொகை பெறுவதற்கு தகுதியான மாற்றுத்திறன் சதவிகிதம் | பயனாளிகளின் எண்ணிக்கை 2023–24 |
|---|---|---|---|
| 1. | அறிவுசார் மாற்றுத்திறன் | 40% மற்றும் அதற்கு மேல் | 1,77,156 |
| 2. | கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறன் | 75% மற்றும் அதற்கு மேல் | 40,274 |
| 3. | முதுகு தண்டுவடம் / தண்டுவடம் மறப்பு நோய் மற்றும் பார்கின்சன் நோய் மாற்றுத்திறன் | 40% மற்றும் அதற்கு மேல் | 2,828 |
| 4. | தசைச்சிதைவு நோய் மாற்றுத்திறன் | 40% மற்றும் அதற்கு மேல் | 4,357 |
| 5. | தொழுநோய் மாற்றுத்திறன் | 40% மற்றும் அதற்கு மேல் | 11,291 |
| | | **மொத்தம்** | **2,35,906** |

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்காக 2,35,906 பயனாளிகளுக்கு ரூ.56,749.44 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.64,922.88 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15.2. அதிக உதவி தேவைப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கான உதவித்தொகை

அதிக உதவி தேவைப்படும் மாற்றுத் திறனாளிகள் தங்களின் அன்றாடப் பணிகளை மேற்கொள்வதற்கு உதவியாளர் ஒருவரை நியமித்துக்கொள்ள ஏதுவாக ரூ.1,000/– உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. "அதிக உதவி தேவைப்படும் மாற்றுத்திறனாளி" என்ற மருத்துவக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் இவ்வுதவித்தொகை வழங்கப்பட்டுவருகிறது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 7788 நபர்களுக்கு ரூ.688.97 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.719.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15.3. படித்த வேலைவாய்ப்பற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான நிவாரணத் தொகை

மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையில் பதிவு செய்து ஓராண்டு முடித்த பின்பும் வேலைவாய்ப்பு பெறாத நிலையில் நிவாரணத்தொகை அவர்களின் கல்வி நிலைக்கு ஏற்றவகையில் வழங்கப்பட்டு வருகிறது. இத்தொகையானது அதிகபட்சம் 10 ஆண்டுகள் அல்லது வேலைவாய்ப்பு பெறும் காலம்வரை இவற்றில் எது முந்தையதோ அதுவரை வழங்கப்படும்.

## அட்டவணை எண் 10

## படித்த வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நிவாரணத்தொகை

| வ. எண் | கல்வித் தகுதி | உதவித்தொகை ரூபாயில் (மாதந்தோறும்) |
|---|---|---|
| 1. | 10 ஆம் வகுப்பு முடித்தவர்கள் | 600/- |
| 2. | 12 ஆம் வகுப்பு முடித்தவர்கள் | 750/- |
| 3. | பட்டப்படிப்பு முடித்தவர்கள் | 1,000/- |

கடந்த 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.851.00 இலட்சம் செலவில் 3,290 நபர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024-2025-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1,400.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15.4. மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு ஒதுக்கீடு பெறுவதற்கான வட்டியில்லா வங்கிக் கடனுதவித் திட்டம்

2023–2024–ஆம் நிதியாண்டில் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசால் ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு பயனாளியின் பங்கு தொகையினை செலுத்துவதற்காக அதிகபட்சம் 1.50 இலட்சத்திற்கு வட்டியில்லா வங்கி கடனுதவி வழங்கும் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. ஆண்டுதோறும் 1000 நபர்கள் பயன் பெறும் வகையில் இத்திட்டத்தினை செயல்படுத்திட மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கு ரூ.120.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் 5 வருட காலத்திற்கு பயனாளிகளுக்கு வட்டியில்லா கடன் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.120.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15.5. திருமண உதவித்தொகை

மாற்றுத்திறனாளிகளை சமுதாயத்தில் வேற்றுமையின்றி ஒருங்கிணைப்பதை ஊக்கப்படுத்திடும் பொருட்டு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றில் ஒன்று திருமண உதவித்தொகை வழங்கும் திட்டம் ஆகும்.

இத்திட்டத்தின்கீழ், மாற்றுத்திறனாளிகளை திருமணம் செய்ய விரும்பும் சாதாரண நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் திருமண உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், திருமண தம்பதிகளுக்கு திருமாங்கல்யம் செய்வதற்காக 8 கிராம் எடையுள்ள தங்க நாணயத்துடன் ரூ.25,000/– ரொக்கமும் வழங்கப்பட்டு வருகிறது. தம்பதிகளில் எவரேனும் ஒருவர் பட்டம் அல்லது பட்டயக்கல்வி பெற்றிருப்பின் மேற்காணும் தொகை ரூ.50,000/–ஆக வழங்கப்படுகிறது.

இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது பார்வை மாற்றுத்திறனாளிகளை மணக்கும் தம்பதிகள் மட்டுமே பயனடைந்து வந்த நிலையில், படிப்படியாக செவித்திறன், கை, கால் பாதிப்படைந்தோர் என விரிவு படுத்தப்பட்டு, தற்போது அனைத்துவகை மாற்றுத்திறனாளிகளுக்கும் பொருந்தும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் மூன்று கட்டங்களாக 537 பயனாளிகளுக்கு ரூ.670.26 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.717.73 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 15.6. கட்டணமில்லா மற்றும் சலுகைக் கட்டணத்துடன் பேருந்து பயணத் திட்டம்

### 15.6.1. நூறு சதவிகித கட்டணமில்லா பயணம் (பேருந்து பயணச் சலுகை அட்டை)

அரசுப் பேருந்துகளில் மாற்றுத்திறனாளிகள் தங்கள் இருப்பிடத்தில் இருந்து, வேலை நிமித்தமாகவோ, கல்வி பெறுவதற்காகவோ, தொழிற்பயிற்சி மேற்கொள்ளவோ அல்லது மருத்துவ மற்றும் மறுவாழ்வு சிகிச்சை மேற்கொள்ளவோ பயணம் செய்வதற்காக பேருந்து பயணச் சலுகை அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் வெள்ளை நிற பெயர்பலகை கொண்ட பேருந்துகளிலும், மாநிலம் முழுவதும் இயங்கும் அனைத்து நகரப் பேருந்துகளிலும் மாற்றுத்திறனாளிகள் தனியாகவும், தனியாக பயணம் செய்ய இயலாதவர்கள் துணையாளர் ஒருவருடனும் எவ்வித கட்டணம் இன்றி பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

மேலும், நகரப் பேருந்துகள் அல்லாத இதரப் பேருந்துகளில் பார்வை மாற்றுத்திறனாளிகள் 100 கிலோ மீட்டர் தூர எல்லைக்குள் எவ்வித நிபந்தனையுமின்றி கட்டணமில்லாமல் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தில், 2023–2024 ஆம் ஆண்டில் 35,294 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

### 15.6.2. பேருந்து கட்டணங்களில் 75 சதவிகித பயணச்சலுகை

அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளும் பயண எண்ணிக்கை மற்றும் தூர உச்ச வரம்பு ஏதுமின்றி தனியாகவும், துணையாளர் ஒருவருடனும் (குளிர்சாதன வசதி கொண்ட அரசு பேருந்துகள் நீங்கலாக) அனைத்து அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலும் 75 சதவிகித பயண கட்டணச் சலுகை அடிப்படையில் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 100 சதவிகிதம் மற்றும் 75 சதவிகிதம் பயணச் சலுகை வழங்கும் திட்டத்தின் கீழ் 13.80 இலட்சம் பயணங்கள் (trips) மேற்கொள்ளப்பட்டமைக்கு ரூ.6,956.43 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.8,925.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. மாற்றுத்திறனாளிகளுக்கு சமூகப் பொருளாதார அதிகாரமளிக்கும் திட்டங்கள்

மாற்றுத்திறனாளிகள் சம உரிமை, சுயமரியாதை, ஒருங்கிணைந்து வாழ ஏதுவாக மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் 4 சதவிகித இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இதன்பொருட்டு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில், மாற்றுத்திறனாளிகள் பணிபுரிய உகந்த பணியிடங்கள்

கண்டறியப்பட்டு அரசு துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பணி நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு தனியார் நிறுவனங்கள் மூலம் வேலை வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. மாற்றுத்திறனாளிகள் இட ஒதுக்கீட்டின் மூலம் அரசு வேலை வாய்ப்புகள் பெறுவதை உறுதி செய்யவும், தனியார் துறைகளில் வாய்ப்புகள் பெறுவதை கண்காணிக்கவும் உயர்மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், அரசுப் பணியிலுள்ள மாற்றுத்திறனாளி பணியாளர்களுக்கு, பதவி உயர்வில் நான்கு சதவிகித இட ஒதுக்கீடு அளித்தல் குறித்த அறிக்கைகளை அளிக்க ஏதுவாக, துணைக்குழு மற்றும் உயர்மட்டக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் செய்வதை ஊக்குவித்திட வங்கிகள் மூலம் கடனுதவி வழங்கப்படுவதுடன், உள்ளாட்சி அமைப்புகளின் வணிக வளாகங்களில் இட ஒதுக்கீடு வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகளுக்கு தனியார் துறைகளிலும் வேலைவாய்ப்புகளை கண்டறிய தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் தலைமையில் உயர்மட்டக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

**16.1. ஒன்றியப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) அகில இந்திய குடிமைப்பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) தொகுதி–I முதன்மைத் தேர்வெழுத ஊக்கத் தொகை**

மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியருக்கு ஒன்றியப் பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) அகில இந்திய குடிமைப்பணிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (TNPSC) தொகுதி–I முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வெழுதுவதை ஊக்குவிக்க இத்திட்டத்தின் கீழ் ஊக்கத் தொகையாக ரூ.50,000/– வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 9 பயனாளிகள் பயன்பெறும் வகையில் ரூ.4.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.4.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16.2. சமவாய்ப்புக் கொள்கை**

மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் 2016, பிரிவு 21–ன் படி மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு வழங்கிடவும், அவர்கள் எளிதில் அணுகுவதற்கு உகந்த தடையற்றச் சூழல்களை ஏற்படுத்தவும், சமவாய்ப்புக் கொள்கைகளை வெளியிடவும் வலியுறுத்தி அரசாணை வெளியிடப்பட்டு, அவை கள அளவில் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

## 16.3. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய நிதி மேம்பாட்டுக் கழகம் (NDFDC)

ஒன்றிய அரசின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறுதொழில் தொடங்குவதற்காக கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான நிதியினை பெற்று மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்க தமிழ்நாடு மாநில மத்திய கூட்டுறவு வங்கியானது கடன் வழங்கும் நிறுவனமாக (Channelising Agency) நியமிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் கடன் பெறும் மாற்றுத்திறனாளிகள் உரிய காலத்தில் கடனைத் திருப்பி செலுத்தும் போது, அந்த கடனுக்கான வட்டித் தொகையினை மாநில அரசே செலுத்துகிறது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 11,525 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.5,444.00 இலட்சம் கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

## 16.4. குறுந்தொழில் துவங்க நிதியுதவி

மாற்றுத்திறனாளிகள் சுயதொழில் புரிவதை ஊக்குவிக்கும் வகையில் வங்கிக் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் குறுந்தொழில் தொடங்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.25,000/- அல்லது கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு இவற்றில் எது குறைவான தொகையோ, அத்தொகை மானியமாக அரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவற்றுடன் அறிவுசார், புறஉலக சிந்தனையற்ற மற்றும் தசைச்சிதைவு மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர்களும் பயனடையும் வகையில் ரூ. 15,000/- அல்லது கடன்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு இவற்றில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, 2022-2023-ஆம் நிதியாண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், நகர்ப்புறங்களின் சாலையோரங்களில் தள்ளுவண்டி, நடைபாதை கடை, நகரும் வண்டிகளில் வியாபாரம் செய்யும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் கடைகளை நடத்த அந்தந்த நகராட்சிகள் மூலம் நகர விற்பனைக் குழு விதிமுறைகளின்படி அனுமதி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 2,316 பயனாளிகளுக்கு ரூ.538.27 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.500.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16.5. பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

ஒன்றிய அரசின் இத்திட்டத்தின் வாயிலாக மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி

சுய வேலைவாய்ப்பினை உருவாக்க தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் வாயிலாக கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், மாற்றுத்திறனாளிகள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையான ஐந்து சதவிகித பயனாளியின் பங்குத் தொகையினை தமிழ்நாடு அரசே முழுமையாக செலுத்துகிறது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 62 பயனாளிகளுக்கு ரூ.8.91 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 16.6. வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் மாவட்ட தொழில் மையங்களின் வாயிலாக வேலைவாய்ப்பற்ற மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்க இத்திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில்தொடங்குவதற்கான திட்டத்தொகையில் ஐந்து சதவீதத்தினை தொழில்முனைவோர் தனது பங்களிப்பு தொகையாக செலுத்த வேண்டும். பயனாளிகள் செலுத்தவேண்டிய ஐந்து சதவிகித பங்கு தொகையானது மாநில அரசால் முழுவதும் மானியமாக வழங்கப்பட்டு வருகின்றது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 76 பயனாளிகளுக்கு ரூ.10.76 இலட்சம் கடன் தொகை மானியம் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.10.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16.7. ஆவின் விற்பனை மையம் அமைப்பதற்கான நிதியுதவி

ஆவின் பாலக விற்பனை மையம் அமைக்கும் திட்டத்தின் மூலம் பயனாளிக்கு ரூ.25,000/– வழங்கும் வகையில் 2018–2019–ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, ஆண்டிற்கு 100 பயனாளிகள் பயன்பெறும் வகையில் 2020–2021–ஆம் ஆண்டிலிருந்து 200 மாற்றுத்திறனாளிகள் பயன்பெறும் வகையில் தலா ரூ.50,000/– நிதியுதவி வழங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்தொகை பால்

பொருட்கள் கொள்முதல் செய்ய மற்றும் முன்வைப்புத்தொகைக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

பொதுப் பணித்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் அரசு வளாகங்களில் மாற்றுத்திறனாளிகள் ஆவின் பாலகம் அமைத்தால் அவ்விடத்திற்கான வாடகை மற்றும் முன்பணம் செலுத்துவதிலிருந்து அரசால் அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2023-2024-ஆம் நிதியாண்டில் ரூ.55.00 இலட்சம் செலவில் 110 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக 2024-2025-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில், ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 16.8. புத்தகக் கட்டுநர் பயிற்சி

பன்னிரெண்டாம் வகுப்பு வரை கல்வி பயின்றுள்ள பார்வை மாற்றுத்திறனாளிகள் பத்து மாத புத்தகக் கட்டுநர் தொழிற் பயிற்சி பூவிருந்தவல்லி அரசுப் பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளியில் அளிக்கப்பட்டு வருகிறது. இப்பயிற்சியில் பங்குபெறும் மாற்றுத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.300/- உதவித்தொகையும், இலவச தங்கும் வசதியும் அளிக்கப்படுகிறது.

கடந்த 2023-2024-ஆம் நிதியாண்டில் 22 நபர்களுக்கு இப்பயிற்சிக்காக ரூ.0.66 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024-2025-ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.0.66 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16.9. பல்லூடகப் பயிற்சி மற்றும் டிஜிட்டல் புகைப்படப் பயிற்சி

சென்னையில் உள்ள தேசிய திரைப்பட மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் உடல் இயக்க மாற்றுத்திறனாளிகள் மற்றும் செவி மாற்றுத்திறனாளிகளுக்கு Final Cut Pro–Digital Non Linear Editing (FCP–DNLE), AVID–Digital Non Linear Editing, பல்லூடக பயிற்சி, இலக்க புகைப்பட பயிற்சி, ஆடியோ இன்ஜினியரிங், அனிமேஷன் ஆகிய பிரிவுகளில் சுமார் 250 மாணவர்கள் பயனடையும் வகையில் ஒரு மாத பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.34.88 இலட்சம் செலவில் 250 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.37.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 16.10. பொருத்துநர் பயிற்சி

சென்னை கிண்டியில் அமைந்துள்ள அரசு தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கு பொருத்துநர் பயிற்சி இரண்டாண்டு காலத்திற்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில், ஆண்டுதோறும் 20 பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 20 பயனாளிகளுக்கு ரூ.0.72 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**16.11. வணிக வளாகங்களில் உள்ள கடைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு 5 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கும் திட்டம்**

2023-2024-ஆம் நிதியாண்டில் உள்ளாட்சி அமைப்புகளின் மூலம் கட்டப்படும் வணிக வளாகங்களில் உள்ள கடைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஐந்து சதவீதம் ஒதுக்கீடு செய்வதற்காக ஆணை மற்றும் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ஆகிய துறைகளின் வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**17. மாநில விருதுகள்**

மாநில அரசு மாற்றுத்திறனாளிகளுக்கான சேவைகளை அங்கீகரிக்கும் வகையில் ஆகஸ்ட் 15-ஆம் நாள் சுதந்திர தினம் மற்றும் டிசம்பர் 3-ஆம் நாள் உலக மாற்றுத்திறனாளிகள் தினம்

ஆகிய நாட்களில் நிறுவனங்களுக்கும், தனி நபர்களுக்கும் கீழ்காணும் விருதுகளை வழங்கி கௌரவித்து வருகிறது.

**அட்டவணை எண்** 11

**சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் மாநில விருதுகள்**

| வ. எண் | விருதின் பெயர் | விருதுகள் எண்ணிக்கை | விருதின் விவரம் |
|---|---|---|---|
| 1. | சிறந்த நிறுவனம் (மாற்றுத் திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய தனியார் நிறுவனம்) | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் |
| 2. | சிறந்த நிறுவனம் விருது (மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை செய்யும் சிறந்த நிறுவனம்) | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம், ரொக்கப் பரிசு ரூ.50,000/- மற்றும் பாராட்டுச் சான்றிதழ் |
| 3. | சிறந்த சமூகப் பணியாளர் விருது (மாற்றுத்திறனாளிகளுக்கு அரும்பணியாற்றிமைக்காக) | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் |

| வ. எண் | விருதின் பெயர் | விருதுகள் எண்ணிக்கை | விருதின் விவரம் |
|---|---|---|---|
| 4. | சிறந்த மருத்துவர் விருது | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் |
| 5. | சிறந்த மாவட்ட ஆட்சியர் விருது | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம், ரூ. 25,000/-ரொக்கப் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் |
| 6. | சிறந்த வங்கிக்கான விருது (மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக அளவில் வங்கிக் கடன் வழங்கிய சிறந்த மாவட்ட கூட்டுறவு வங்கி) | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ். |

இத்திட்டத்திற்காக, 2024-2025-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.8.33 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அட்டவணை எண் 12

## உலக மாற்றுத்திறனாளிகள் தினமான டிசம்பர்–3 ஆம் நாள் வழங்கப்படும் மாநில விருதுகள்

| வ. எண் | விருதின் பெயர் | விருதுகள் எண்ணிக்கை | விருதின் விவரம் |
|---|---|---|---|
| 1. | சிறந்த நிறுவனம் | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ் |
| 2. | சிறந்த சமூகப் பணியாளர் | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ் |
| 3. | சிறந்த ஆசிரியர்கள் (மூன்று வகை) | 3 விருதுகள் | தலா ஒரு நபருக்கு 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ். |
| 4. | சிறந்த பணியாளர் / சுயதொழில் புரிபவர் | 10 விருதுகள் | தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ் |
| 5. | மாற்றுத் திறனாளிகளை அதிக அளவில் பணியமர்த்திய சிறந்த நிறுவனம் | 1 விருது | 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ் |
| 6. | ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணியாற்றும் சிறந்த ஆசிரியர் | 2 விருதுகள் | தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ் |

| வ. எண் | விருதின் பெயர் | விருதுகள் எண்ணிக்கை | விருதின் விவரம் |
|---|---|---|---|
| 7. | மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பணியாற்றிய ஓட்டுநர் மற்றும் நடத்துனர் | 2 விருதுகள் | தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ் |
| 8. | மாற்றுத் திறனாளிகளக்கு தடையற்ற சூழல் அமைத்த சிறந்த அரசு மற்றும் தனியார் நிறுவனம் | 2 விருதுகள் | தலா ஒரு நபருக்கும் 10 கிராம் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுச்சான்றிதழ் |
| **மொத்த விருதுகள்** | | **22 விருதுகள்** | |

கடந்த 2023–2024–ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூ.63.78 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2024–2025–ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ரூ.119.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 18. தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம்

தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் நல வாரியம் 2007–ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. 2022–ஆம் ஆண்டு, மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் தலைமையில் புதிய உறுப்பினர்களைக் கொண்டு மறுசீரமைக்கப்பட்டுள்ளது. பத்து வயதிற்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளை உறுப்பினர்களாகப் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் பதிவு செய்யப்படுகின்றனர். இவர்களுக்கும், இவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கும், இவ்வாரியத்தின் மூலம் கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மூக்கு கண்ணாடி வாங்குவதற்காக உதவித்தொகை, மகப்பேறு மற்றும் கருச்சிதைவுக்கான உதவித்தொகை, விபத்தினால் ஏற்படும் பாதிப்பு மற்றும் மரணத்திற்கான நிவாரணத்தொகை, இயற்கை மரணத்திற்கான ஈமச்சடங்கு உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2023–2024–ஆம் நிதியாண்டு மாற்றுத் திறனாளிகள் நல வாரியத்தின் வாயிலாக வழங்கப்பட்டு வரும் விபத்து மரணம், மருத்துவம், கல்வி மற்றும் இதர உதவித்தொகையினை இரண்டு மடங்காக உயர்த்தி கூடுதலாக ரூ.200.00 இலட்சம் செலவில் நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாரியத்தின் மூலம் வழங்கப்படும் உதவி விவரங்கள் பின்வருமாறு:–

**அட்டவணை எண்** 13

**மாற்றுத்திறனாளிகள் நல வாரிய உதவிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | தனி நபர் விபத்து நிவாரணம் | | |
| | (அ) | விபத்தினால் இறப்பு | ரூ. 2,00,000/– |
| | (ஆ) | கை அல்லது கால் இழப்பு இரு கண் பார்வை இழப்பு மற்றும் முழுமையான செயலிழப்பு | ரூ. 2,00,000/– |
| | (இ) | ஒரு கை அல்லது ஒரு கால் அல்லது ஒரு கண் பார்வை இழப்பு அல்லது முழுமையான கண்பார்வையின்மை | ரூ. 50,000/– |
| 2. | மாற்றுத்திறனாளி நபரின் இறுதிச் சடங்கிற்கான நிதியுதவி | | ரூ. 2,000/– |
| 3. | மாற்றுத்திறனாளி நபரின் இயற்கை மரணத்திற்கான நிதியுதவி | | ரூ. 15,000/– |

| | | | |
|---|---|---|---|
| 4. | மாற்றுத்திறனாளியின் மகன் மற்றும் மகள் கல்வி பயில வருடாந்திர உதவித்தொகை | | |
| (அ) | i. | 10– ஆம் வகுப்பு பயிலும் மகள் | ரூ. 2,000/– |
| | ii. | 10– ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் மற்றும் மகள் | ரூ. 2,000/– |
| (ஆ) | | 11– ஆம் வகுப்பு மற்றும் அதற்கு சமமாக பயிலும் மகள் | ரூ. 2,000/– |
| (இ) | i. | 12– ஆம் வகுப்பு அல்லது அதற்கு சமமாகப் பயிலும் மகள் | ரூ. 3,000/– |
| | ii. | 12– ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மகன் மற்றும் மகள் | ரூ. 3,000/– |
| (ஈ) | i. | இளங்கலை பட்டப்படிப்பு பயின்று வரும் மகன் மற்றும் மகள் | ரூ. 3,000/– |
| | ii. | இளங்கலை பட்டப்படிப்பு விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 3,500/– |
| | iii. | முதுகலை பட்டப்படிப்பு பயின்று வரும் மகன் மற்றும் மகள் | ரூ. 4,000/– |
| | iv. | முதுகலை பட்டப்படிப்பு விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 6,000/– |
| (உ) | i. | சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல் அல்லது அதற்கு இணையான தொழிற்கல்விப் படிப்பு பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 5,000/– |

| | | | |
|---|---|---|---|
| | ii. | விடுதியில் தங்கி சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை அறிவியல் அல்லது அதற்கு இணையான தொழிற்கல்விப் படிப்பு பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 6,000/– |
| | iii. | தொழிற்கல்வி மற்றும் பட்ட மேற்படிப்பு பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 6,000/– |
| | iv. | தொழிற்கல்வி மற்றும் பட்ட மேற்படிப்பு விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 8,000/– |
| (ஊ) | i. | தொழிற்பயிற்சி நிலையம் அல்லது தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 2,000/– |
| | ii. | விடுதியில் தங்கிப் பயிலும் மகன் மற்றும் மகள் | ரூ. 2,500/– |
| 5. | திருமண உதவித் தொகை (கணவன் அல்லது மனைவி ஒருவருக்கு மட்டும்) | | ரூ.2,000/– |
| 6. | பெண் உறுப்பினர்களுக்கு மகப்பேறு நிதியுதவி | | |
| | (அ) | மகப்பேறு | ரூ. 6,000/– |
| | (ஆ) | கருச்சிதைவு / கருக்கலைப்பு | ரூ. 3,000/– |
| | (இ) | அறுவை சிகிச்சை | ரூ. 9,000/– |
| 7. | | முதுகு தண்டுவடம் பாதிப்படைந்தோர் ஆல்பா படுக்கை கொள்முதல் செய்ய | ரூ. 6,000/– |
| 8. | | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு நிதியுதவி | ரூ. 500/– |

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் ரூ.529.62 இலட்சம் செலவில் 4,026 பயனாளிகளுக்கு இவ்வாரியத்தின் மூலம் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்காக, 2024–2025–ஆம் நிதியாண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.529.62 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 19. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்

மாற்றுத்திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் மூலம் ரூ.5.00 இலட்சம் வரை மருத்துவச் சிகிச்சை பெற்று பயன்பெறலாம். இத்திட்டத்தின் மூலம் புறஉலக சிந்தனையற்ற மாற்றுத்திறனாளிகள் பயனடைந்து வருகின்றனர். மாற்றுத்திறனாளிகளுக்கான செயற்கை அவயங்கள் இத்திட்டத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்

திட்டத்தில், அனைத்து வகையான மாற்றுத் திறனாளிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரும் வருமான உச்ச வரம்பு ஏதுமின்றி மருத்துவ சிகிச்சைப்பெற தகுதியுடையவர்கள் ஆவர். மேலும் தசைச்சிதைவு, அறிவுசார், மூளை முடக்குவாதம், கற்றலில் குறைபாடு, செவிதிறன் மற்றும் பல்வகை மாற்றுத்திறன் குழந்தைகளுக்கு பராமரிப்பு சிகிச்சைகள் இத்திட்டத்தின் மூலம் விரிவுபடுத்தப்படும்.

## 20. உரிமைகள் திட்டம் (RIGHTS Project)

மாற்றுத்திறனாளிகள் உரிமைகளை பாதுகாக்கவும் அவர்களுக்கான தடையற்ற சூழலை ஏற்படுத்தவும், சமூக பொருளாதார முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை மேம்படுத்தவும், உலக வங்கியின் நிதி உதவியுடன் 'உரிமைகள் திட்டம்' கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாற்றுத்திறனாளிகள் தங்களுக்கு தேவையான

சுகாதார, சமூக பராமரிப்பு சேவைகள், நலத்திட்டங்கள் ஆகியவற்றினை வசிக்கும் இடத்திலேயே பெறுவதை 'உரிமைகள் திட்டம்' உறுதி செய்கிறது. உலக வங்கியின் நிதி உதவியுடன் இத்திட்டம் 6 ஆண்டு காலத்திற்கு ரூ.1773.87 கோடி நிதி ஒதுக்கீட்டில் செயல்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் தொடக்க நிகழ்வாக மாற்றுத்திறனாளிகள் பற்றிய விவரங்களை சேகரிப்பதற்காக (Social Registry) தரவு தளம் ஏற்படுத்துவதற்கான பணிகளும், வட்டார மற்றும் கோட்ட அளவில் ஒருங்கிணைந்த சேவை மையங்களை (One Stop Social Care Service Centre) தொடங்க நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

உரிமைகள் திட்டத்தை செயல்படுத்துவதற்காக தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் உள்கட்டமைப்பு வசதிகள், பணியாளர் நியமனம், மறுவாழ்வுப்பணிகள் மேற்கொள்வதற்கான முகமைகள் தெரிவு செய்தல், மாற்றுத்திறனாளிகள் இருப்பிடம் தேடி மறுவாழ்வு

சிகிச்சை அளிப்பதற்கான வாகனங்கள், உபகரணங்கள் உள்ளிட்டவை கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், இத்திட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் பொருளாதார மேம்பாடு அடைவதற்கும், வேலைவாய்ப்பு பெறுவதற்கும், தனியார் தொழில் நிறுவனங்களுடன் இணைந்து தொழிற்பயிற்சி வழங்குவதற்கான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

மாற்றுத்திறனாளிகளுக்கு தடையற்ற சூழலை ஏற்படுத்த பொதுக்கட்டிடங்களை தணிக்கை செய்து, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

உரிமைகள் திட்டம் செயல்படுத்துவதை கண்காணிக்கவும், இதர துறைகளின் சேவைகளை ஒருங்கிணைக்கவும், மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக

18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளின் அனைத்து சேவைகளையும் ஒருங்கிணைக்க, சமூகநலம், சுகாதாரம், கல்வி உள்ளிட்ட துறைகளை ஒருங்கிணைத்து மறுவாழ்வு சேவைகளுக்கான நிலையான வழிகாட்டு முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

இதற்காக மாநில, மாவட்ட அளவில் ஒப்பந்த அடிப்படையிலான ஆலோசகர்கள் மற்றும் பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், வட்டார மற்றும் கிராம அளவில் அனைத்து அரசு துறைகளில் குறிப்பாக, ஊரக வளர்ச்சித் துறை, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல்துறை, பள்ளிக் கல்வித் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை ஆகிய துறைகளின் களப்பணியாளர்களுடன் இணைந்து இத்திட்டத்தினை செயல்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒருங்கிணைந்த சேவை மையத்தினை அமைத்தல், ஊதியம், பயிற்சி, கணக்கெடுப்பு, நடமாடும் சேவை மையம் அமைத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்காக கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் அரசால் ரூ.1700.00 இலட்சம் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 21. சிறப்பு முன்னெடுப்புகள்

2023–ஆம் ஆண்டிற்கான சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தினை முன்னிட்டு மாற்றுத்திறன் குழந்தைகள் கலை மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கேற்க ஊக்குவிக்கும் வகையிலும், சமுதாயத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தவும், சிறப்பு முன்னெடுப்பாக அக்குழந்தைகளை சுற்றுலாத்துறை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய குளிர்சாதன வசதி கொண்ட பேருந்தில் இன்பச் சுற்றுலாவாக மகாபலிபுரம்

அழைத்துச் சென்றும், திருச்சிராப்பள்ளியிலிருந்து சென்னைக்கு அரசு சிறப்பு பள்ளியில் பயிலும் பார்வை மாற்றுத்திறன் மாணவிகளை விமான பயணம் மேற்கொள்ள செய்தும், சென்னை மெட்ரோ ரயிலில் பயண அனுபவத்தை வழங்கியும், சிறப்புக் குழந்தைகள் திரையரங்கில் பிரத்யேகமாக திரைப்படத்தினை கண்டுகளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

## 22. ஒன்றிய அரசின் திட்டங்கள்

### 22.1. தனித்துவம் வாய்ந்த மாற்றுத்திறனாளிக்கான அடையாள அட்டை (UDID)

மாற்றுத்திறனாளிகளுக்கு தனித்துவம் வாய்ந்த மாற்றுத்திறனாளிக்கான அடையாள அட்டை ஒன்றிய அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த அட்டைகளை (UDID) இணையதளத்தில் மாற்றுத்திறன் சான்றிதழை பதிவேற்றம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

மாற்றுத்திறனாளிகள் இந்த தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டையினை பயன்படுத்தி நாடு முழுவதும் அனைத்து விதமான சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த அட்டைகள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் அலுவலகங்கள் வழியாக நேரடியாகவும், இணைய தளம் வழியாகவும், சிறப்பு முகாம்கள் மூலமாகவும் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் 30.04.2024 வரை 8,05,919 அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 22.2. மாற்றுத் திறனாளிகளுக்கான உதவி உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பொருத்துவதற்கான உதவித் திட்டம் (ADIP Scheme)

மாவட்ட நிர்வாகம் மூலம் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, மாற்றுத்திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் நேரடியாக வழங்கப்பட்டு வருகின்றன.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அரசின் பரிந்துரையுடனும் மாவட்ட நிர்வாகம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேரடியாக கருத்துருவினை சமர்ப்பித்து, ஒன்றிய அரசால் ஏற்கப்படும் நேர்வில் மாவட்ட நிர்வாகம் மூலமாக முகாம்கள் நடத்தப்படுகின்றன.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 18 மாவட்டங்களில் முகாம்கள் நடத்தப்பட்டு 8586 மாற்றுத்திறன் பயனாளிகளுக்கு ரூ.928.23 இலட்சம் மதிப்பீட்டில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

## 22.3. தீனதயாள் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டம் (DDRS)

மாற்றுத்திறனாளிகளுக்கு முழுமையான மறுவாழ்வு அளிப்பதற்காக தீனதயாள் மாற்றுத்திறனாளிகளுக்கான மறுவாழ்வுத் திட்டத்தின் மூலம் மாநில அரசின் பரிந்துரையின் அடிப்படையில்

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றன. செவித்திறன், பார்வை திறன், அறிவு சார் மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி, மறுவாழ்வு பயிற்சி மற்றும் பராமரிப்பு உதவி, நிறுவனம் மற்றும் சமுதாயம் சார்ந்த மறுவாழ்வு பணிக்கு நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது.

கடந்த 2023–2024–ஆம் நிதியாண்டில் 17 நிறுவனங்களுக்கு ரூ.391.25 இலட்சம் நிதியுதவி வேண்டி ஒன்றிய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

## 22.4. தடையற்றச் சூழலை ஏற்படுத்தும் விழிப்புணர்வு பிரச்சாரம் (சுகம்யா பாரத் அபியான்)

மாற்றுத்திறனாளிகளுக்கு பொது இடங்கள், கட்டடங்கள், சாலையோரங்களில், தடையற்ற சூழலை ஏற்படுத்தும் விதமாக தமிழ்நாட்டில் சென்னை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் உள்ள 49 கட்டடங்களைத் தெரிவு செய்து

30 கட்டடங்களுக்கு ரூபாய் 4608.95 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து தடையற்ற சூழல் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள கட்டடங்களுக்கான நிதி கோரப்பட்டுள்ளது.

மாநில அரசின் முழு பங்களிப்புடன் பொதுக்கட்டடங்களில் தடையற்றச் சூழலை மேற்கொள்ள ஏதுவாக சென்னை மாவட்டத்தில் 74 கட்டடங்களில் ரூ.12.45 இலட்சம் செலவினத்திலும், மாநிலம் முழுவதும் உள்ள 10 நகரங்களில் 176 கட்டடங்களில் ரூ.44.84 இலட்சம் செலவினத்திலும் தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் அனைத்து பொது கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகள் உபயோகத்திற்கு உகந்த தடையற்றச் சூழல்களை அமைக்கும் விதமாக மின்தூக்கி அமைத்தல், சாய்வுதளம் மற்றும் கைப்பிடி அமைத்தல், கழிவறை அமைத்தல், பார்வை மாற்றுத்

திறனாளிகளுக்கான தரைப்பரப்பு, பிரெய்ல் எழுத்து தகவல் பலகைகள் பொருத்துதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 22.5. மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை

ஒன்றிய அரசால் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான தேசிய கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் உதவித்தொகையினைப் பெற 9–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.2.5 இலட்சம் எனவும், பட்டயம், இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பு பயிலும் மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.6.00 இலட்சம் எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இக்கல்வி உதவித்தொகையினைப் பெற 2023-2024-ஆம் நிதியாண்டில் 4,748 மாற்றுத்திறனாளி மாணவ / மாணவியர்களின் விண்ணப்பங்கள் பரிந்துரைக்கப்பட்டு, இதில் 3,038 எண்ணிக்கையிலான மாணவ / மாணவிகளின் விண்ணப்பங்களுக்கு ரூபாய் 484.97 இலட்சம் தேசிய கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## அட்டவணை எண் 14

## தேசிய கல்வி உதவித்தொகை

| வ. எண். | திட்டத்தின் வகை | உதவித்தொகை விவரம் (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | மேல்நிலை கல்விக்கு முன் (Pre-Matric) 9 ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை | 9,000/- முதல் 14,600/- வரை |
| 2. | மேல்நிலை கல்விக்கு பின் (Post-Matric) பட்டம் மற்றும் இளங்கலை | 10,100/- முதல் 1,74,700/- |
| 3. | உயர்கல்வி (Top-Class) உயர்கல்வி மற்றும் முதுகலை | 47,000/- முதல் 3,40,000/- |

## 23. முடிவுரை

தமிழ்நாடு அரசு அனைவரையும் உள்ளடக்கிய சமுதாயத்தில் மாற்றுத்திறனாளிகள் சம உரிமை பெற்று, சுயமரியாதையுடன் வாழத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது. மேலும் இத்தகைய இடைவிடா தொடர் நடவடிக்கைகளால் மாற்றுத்திறனாளிகள் ஒருங்கிணைந்த மறுவாழ்வு பெற்று சிறப்புடன் வாழ்வதை நோக்கமாகக் கொண்டு இவ்வரசு தொடர்ந்து செயல்படும்.

**மு. க. ஸ்டாலின்**
**முதலமைச்சர்**

## அட்டவணை எண் 15

## 2024–2025–ஆம் நிதியாண்டிற்கான திட்ட வாரியான நிதி ஒதுக்கீடு

| வ. எண் | சேவைகள் / பயிற்சி | ரூபாய் (இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு சதவிகிதம் |
|---|---|---|---|
| 1. | தடுப்பு மற்றும் ஆரம்ப நிலை பயிற்சி | 1,552.01 | 1.12 |
| 2. | சிறப்புக்கல்வி திட்டங்கள் | 8,817.95 | 6.35 |
| 3. | வேலை வாய்ப்பு மற்றும் தொழிற்பயிற்சி | 617.39 | 0.45 |
| 4. | சமூக பாதுகாப்பு திட்டங்கள் (பராமரிப்பு உதவித்தொகை மற்றும் கட்டணமில்லா பயணச்சலுகை, கல்வி நிறுவனங்களுக்கான உதவிகள் உள்ளிட்டவை) | 80,517.80 | 57.96 |
| 5. | உதவி உபகரணங்கள் | 6,336.89 | 4.56 |
| 6. | தடையற்ற சூழல் அமைத்தல் மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகள் | 2,226.35 | 1.60 |
| 7. | உரிமைகள் திட்டம் | 27,553.21 | 19.83 |
| 8. | இதர இனங்கள் (சம்பளம் மற்றும் இதர நிர்வாக செலவுகள்) | 11,294.84 | 8.13 |
| | **மொத்தம்** | **1,38,916.44** | **100** |



மூளை முடக்குவாத குழந்தைகளுக்கான சிறப்பு நாற்காலி




மின்னணு வடிவில் உள்ள புத்தகங்களை பிரெய்லி எழுத்துக்கள் வடிவில் தொடு உணர்வுடன் அறிய உதவும் வாசிக்கும் கருவி



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சியில் 13.03.2024 அன்று நடைபெற்ற அரசு விழாவில் மக்களுடன் முதல்வர் திட்டத்தில் விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்பட்டது.





**சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு அரசு சிறப்புப்பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மகாபலிபுரம் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.**




சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு
திருச்சிராப்பள்ளி பார்வையற்றோர் மேல்நிலைப் பள்ளியில்
பயிலும் மாணவிகள் விமானத்தில் பயணம் மேற்கொண்டனர்.




சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு
சென்னையில் உள்ள சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ –
மாணவியர்கள் மெட்ரோ இரயிலில் பயணம் மேற்கொண்டனர்.

## 2020–2021 ஆம் ஆண்டு முதல் 2024–2025 ஆம் ஆண்டு வரையிலான நிதி ஒதுக்கீடு

| வ.எண். | நிதியாண்டு | ரூபாய் (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | 2020–2021 | 66708.02 |
| 2 | 2021–2022 | 81362.56 |
| 3 | 2022–2023 | 91712.53 |
| 4 | 2023–2024 | 110648.96 |
| 5 | 2024–2025 | 138916.44 |

## 2020–2021 ஆம் ஆண்டு முதல் 2024–2025 ஆம் ஆண்டு வரையிலான நிதி ஒதுக்கீடு



## 2024-2025 ஆம் ஆண்டிற்கான திட்டவாரியான நிதி ஒதுக்கீடு (சதவீதத்தில்)

